## பொருளாதார வளர்ச்சியின் ஒரு புதிய தலைமுறை

விஞ்ச முடியாத ஒரு வாழ்க்கைத் தரத்தை ஒன்ராறியோ மக்கள் அனுபவிக்கக் கூடிய வகையில் உறுதியான பொருளாதாரத்தை எய்தி, அதனைத் தொடர்ந்து நிலைநாட்ட ஒன்ராறியோ அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது.

முதலீட்டைக் கவர்ந்துகொள்வதற்கும், வணிகம் வளர்ந்து வளம் பெறுவதற்கும், ஆய்வு வர்த்தக மயப்படுத்தல், புதியன கண்டுபிடிக்கப்படுதல் ஆகியவற்றை உற்சாகப்படுத்துவதற்கும் 2004 வரவு செலவுத் திட்டம் பல முக்கிய வழிமுறைகளை முன்வைக்கின்றது.

திட்டவட்டமான பிரேரணைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

- நிகழ் காலம் முதல் 2012 ஆம் ஆண்டளவில் முதலீட்டு வரியைப் படிப்படியாகப் பூரணமாக அகற்றுதல்;
- ஒரு புதிய பயிற்சியாளர் பயிற்சி வரிக் கொடுப்பனவு (***A**pprenticeship **T**raining **T**ax **C**redit*) ஊடாக, பயிற்சியாளரை வேலைக்கு அமர்த்த வேலை வழங்குவோரை ஊக்குவித்தல்;
- சிறு வணிக முகவர் நிலையம் ஒன்றை உருவாக்குதல்;
- கொம்பியூட்டர், தரவுகள் வலைப்பின்னற் கட்டமைப்புக் கருவிகள் என்பவற்றின் பெறமதிக் குறைப்பை விரைவுபடுத்தும் வகையில் மூலதன விலைக் கொடுப்பனவுகளை (*capital cost allowance*) மாற்றியமைத்தல்;
- சிறிய மற்றும் நடுத்தர வணிக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வட ஒன்ராறியோ வளர்ச்சிப் பிணைப் பத்திரத் (*Northern Ontario Grow Bonds*) திட்டம் ஒன்றினை அறிமுகம் செய்தல்;
- வர்த்தகமயப்படுத்தும் நோக்குடன் பகிரங்க ஆய்வு நிறுவனங்கள் தனியார் முதலீடுகளைப் பெற உதவும்பொருட்டு 36 மில்லியன் டொலர் செயல் திட்டம் ஒன்றினை உருவாக்குதல்;
- ஒரு பத்து வருட செயன்முறைக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல்.

2004 ஒன்ராறியோ வரவு செலவுத் திட்டம் தொடர்பான பொதுவான விசாரணைகளுக்கு :

Ministry of Finance Information Centre

| | |
|---|---|
| Toll-free English & French inquiries | 1-800-337-7222 |
| Teletypewriter (TTY) | 1-800-263-7776 |

இப்பத்திரத்தின் மின்பிரதிக்கு எமது இணையத் தளத்துக்கு விஜயம் செய்யுங்கள்:
www.ontariobudget.fin.gov.on.ca

Tamil



அச்சுப் பிரதிகள் இலவசமாகக் கிடைக்குமிடம்:
Publications Ontario
880 Bay Street, Toronto, Ontario M7A 1N8

| | |
|---|---|
| Telephone: | (416) 326-5300 |
| Toll-free: | 1-800-668-9938 |
| TTY Toll-Free: | 1-800-268-7095 |
| Web site: | www.publications.gov.on.ca |

Ontario

# 2004 ஒன்ராறியோ

## *வரவு செலவுத் திட்டம்*

## முக்கிய அம்சங்கள்

### *மாற்றத்துக்கான திட்டம்*



# 2004 வரவு செலவுத் திட்டம் – சுகாதாரமும் கல்வியும் முதன்மை பெற்ற விரிவான நான்கு வருடத் திட்டம்

கௌரவ நிதியமைச்சர் கிரேக் சோர்பெரா 2004, மே 18இல் இந்த வரவு செலவுத் திட்டத்தை வழங்கினார்.

நான்கு வருட பொதுநிதித் திட்டம் ஒன்றினை முதற் தடவையாக வடிவமைக்கும் இந்த வரவு செலவுத் திட்டமானது முதலீடு, அரச வருமான உருவாக்கம், செலவினக் குறைப்பு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் சமநிலைப்படுத்தப்பட்ட கூட்டு ஒன்றினை முன்வைக்கின்றது. ஒன்றாறியோ மக்களது விருப்புக்கும் தேவைக்கும் உரிய மாற்றங்களை பின்வரும் வழிகளில் இது ஆதரிக்கின்றது:

- ஆபத்தான சுகாதார சேவைகளுக்கெனக் காத்திருக்கும் நேரத்தைக் குறைத்தல் மற்றும் வகுப்புப் பருமனைக் குறைத்தல்;
- முக்கிய சேவைகளைக் குறைக்காத வகையில் 2007-08இல் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தல்;
- கல்வி, பயிற்சி, சுகாதாரம், கட்டமைப்பு என்பற்றில் முதலீடு செய்வதன் மூலமாக பொருளாதார வளர்ச்சியையும் புதியன கண்டுபிடிக்கும் முயற்சிகளையும் ஊக்குவித்தல்;
- சுகாதார சேவையில் முதலீடு செய்யும் பொருட்டும் அதனை வடிவமைத்து, வழங்கி, மதிப்பிடும் வழியை சீரமைக்கும் பொருட்டும் சற்று கூடுதலான பணம் செலுத்துமாறு ஒன்றாறியோ மக்களிடம் வேண்டுதல்;
- பொறுப்பு வாய்ந்த, யதார்த்தமான, நின்று நிலைக்கக்கூடிய நிதித்திட்டமிடல் வழிமுறை ஒன்றை உருவாக்குவதற்கு, அரச வருமான அதிகரிப்பு, சில துறைகளில் செலவினங்களைக் கட்டுப்படுத்தல், முன்னுரிமை பெற்ற துறைகளில் முதலீடு செய்தல் என்பவற்றை இணைத்தல்.

## ஒன்றாறியோ மக்களுக்கான சிறந்த சுகாதாரம்

அதிக அளவில் நோயாளரைக் குறிக்கோளாகக் கொண்டதாகவும், நுகர்வோர் சார்பானதாகவும், விளைவை நோக்கி உந்தப்பட்டதாகவும் அமையக்கூடிய விதத்தில் சுகாதார அமைப்பினை ஒன்றாறியோ அரசாங்கம் சீரமைக்கும்.

சுகாதார பராமரிப்பு அமைப்பில் செய்யப்படும் முதலீடுகள்:

- புற்றுநோய் பராமரிப்புக்கான காத்திருப்புக் காலத்தைக் குறைக்கும்; மேலும் 36,000 அதிக இருதய சிகிச்சை நடைமுறைகள், மேலும் 9,000 கண்படல சத்திர சிகிச்சைகள், மேலும் 2,340 அதிக மூட்டு மாற்றீடு, மேலும் 529,000 செயற்கை முறை இரத்தச் சுத்திகரிப்புச் சிகிச்சைகள் ஆகியவற்றை வழங்கும்;
- வைத்தியர்களும் தாதியர்களும் சிறப்புத் தாதியர்களும் அடங்கிய 150 குடும்ப சுகாதார குழுக்களைச் சேர்த்துக் கொள்ளும்;
- 95,700 மேலதிக ஒன்றாறியோ மக்களுக்கு வீட்டுப் பராமரிப்பை வழங்கும்;
- 3,760 மேலதிக நீண்ட கால பராமரிப்புக் கட்டில்களைத் திறந்து வைத்தல்;
- சிறுவர்களுக்கான இலவச நோய் தடுப்புத் திட்டத்திற்குள் பொக்குளிப்பான், மூளைக் காய்ச்சல், நிமோனியா ஆகியவற்றை இவ்வருடம் சேர்த்துக்கொள்ளும்.

சுகாதார பராமரிப்புக்கான எமது முதலீடுகளுக்கு நிதியளிப்பதற்கென ஒன்றாறியோ சுகாதாரக் காப்புறுதிக் கட்டணத்தை அறிமுகம் செய்ய நாம் முன்மொழிகின்றோம். ஒவ்வொரு சதத்தினையும் சுகாதாரத்துக்கென, சுகாதாரத்துக்கு மட்டுமேயென அர்ப்பணிக்கும் வகையில், காப்புறுதியானது மக்களது வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்:

- மிகக் குறைந்த வருமானத்தைப் பெறும் மக்கள் கட்டணம் எதனையும் செலுத்த மாட்டார்கள்;
- ஏனையோர் வருடம் 300 டொலருக்கும் 900 டொலருக்கும் அல்லது மாதம் 25 டொலருக்கும் 75 டொலருக்கும் இடைப்பட்ட தொகையைச் செலுத்துவர்.

## மாணவர்களுக்கான வெற்றி

அரசாங்கத்தின் கல்வித் திட்டமானது சிறுவர்களுக்கும் அவர்களது பாடசாலைகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த புதிய முதலீடுகளை வழங்கும். முதலீடுகளாவன:

- ஆரம்ப வகுப்பு முதல் 3ஆம் வகுப்பு வரை வகுப்பு மாணவர் எண்ணிக்கையை 20 ஆக மட்டுப்படுத்தல்;
- வாசிப்பு, எழுத்து, கணித பாடங்களில் மாநில தராதரத்தை எய்தும் மாணவர்களின் எண்ணிக்கையை 75% ஆக அதிகரித்தல்;
- மேலும் 1,000 ஆசிரியர்களை பயிற்றுவித்தல்;
- புதிய 4,000 எழுத்தறிவு, எண்ணறிவு ஆசிரிய நிபுணர்களை பயிற்றுவித்தல்.

## மேலும் உறுதியான சமூகங்கள்

பின்வரும் வழிகளில் அரசாங்கம் சமூகங்களில் முதலீடு செய்யும்:

- நடைமுறையிலிருக்கும் மாகாண எரிபொருள் வரியின் இரண்டு சதத்தை பகிரங்க போக்குவரத்துக்கென நகர சபைகளுக்கு வழங்குதல்;
- *சத்துணவு முகாமைத்துவ சட்டத்திற்கு* அமைய விவசாயிகள் நடந்துகொள்ள உதவுதல்;
- நெடுஞ்சாலைகளை திருத்தி, விரிவபடுத்தவென ஏறக்குறைய 1 பில்லியன் டொலரை முதலீடு செய்தல்;
- ஒன்றாறியோ ஊனமுற்றோர் ஆதரவுத் திட்டம், ஒன்றாறியோ சமூகநல உதவி ஆகியவற்றைப் பெறுவோரின் அடிப்படைத் தேவைகள், அதியுச்ச வதிவிட உதவித் தொகையை மூன்று சதவீதத்தால் அதிகரித்தல்;
- குறைந்த, நடுத்தர வருமானம் பெறும் முதியோருக்கான சொத்து வரிக் கொடுப்பனவை அதிகரிக்க முன்மொழிதல்.